**24.02.2026** **<u>அசல் வழக்கு எண்.108/2011</u>** **Starting Time : 1.11 p.m.**

**<u>பி.வா.சா.1</u> திரு. சரண்ராஜ் த/பெ. இலட்சுமணன்**

**(பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1-ஐ ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக மீண்டும் அழைக்கப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்காக இன்று வாய்தா உள்ளது)**

**<u>சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1**). வேலூர் மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.165/1975ன் வழக்கு பதிவேட்டின் சான்றிட்ட நகல் **பி.வா.த.சா.ஆ.10** என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளபட்சத்தில், அது யார் யாருக்கு இடையே நடந்த வழக்கு என்றால் எனது தகப்பனார் பூர்வீக சொத்தை சமமாக பாகம் கேட்டு தாக்கல் செய்தார். யாருக்கு எதிராக மேற்படி வழக்கு தாக்கல் செய்தார் என்றால் அவரது அப்பா கிருஷ்ணனுக்கு எதிராக தாக்கல் செய்தார். எந்தெந்த சர்வே எண்ணிற்காக வழக்கு தாக்கல் செய்தார் என்றால் 32/6ல் 1 ஏக்கர் 20 சென்ட்டுக்கும் 32/7ல் 1 ஏக்கர் 20-சென்ட்டுக்கும் தாக்கல் செய்தார். எனக்கு குறிப்பிட்டு தெரியவில்லை. சர்வே எண்.36/2 சொத்தை இந்த வழக்கின் வாதி ஆறுமுகம் கிரயம் வாங்கியதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

**2**). நான் தாக்கல் செய்துள்ள **பி.வா.த.சா.ஆ.8** மற்றும் **பி.வா.த.சா.ஆ.9** ஆவணங்களான இந்நீதிமன்ற அசல் வழக்கு எண்.7/2006ன் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை நகல் யார் யாருக்கு இடையே எந்த சொத்திற்காக நடந்தது என்றால் பூர்வீக சொத்து தவறுதலாக பட்டா மாற்றம் இருந்ததால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி பூர்வீக சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 32/6, 1 ஏக்கர் 20 சென்ட் ஆகும். நான் சொல்வது தவறு என்றும், மேற்படி அசல் வழக்கு எண்.7/2006ஆனது தெள்ளார் கிராம சார்பதிவாளர் அலுவலக பத்திர எண்.472/1983, 473/1983 ஆகிய பத்திரங்கள் தாவா எ செட்டியுல் சொத்திற்கு சம்பந்தப்பட்டது அல்ல என விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**3**). மேற்படி அசல் வழக்கு எண்.7/2006ன் எ செட்டியுல் சொத்தில் ஜக்பந்தி மயான பாட்டைக்கு மேற்கு என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். ஏரிக்கால்வாய்க்கு கிழக்கு என்று உள்ளது என்றால் சரிதான். ஆறுமுகம் நிலத்திற்கு தெற்கு, இலட்சுமணன் நிலத்திற்கு வடக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இலட்சுமணன் என்பவர்

எனது தகப்பனார் என்றால் சரிதான். மேற்படி இலட்சுமணனின் தாயார் ராஜம்மாள் என்றால் சரியல்ல, ரங்கநாயகி ஆவார். சர்வே எண்.32/6 சொத்து என் தகப்பனாருக்கு எவ்வாறு உரிமையானது என்றால் 1986ல் ஏற்பட்ட பாகப்பிரிவினையின் மூலம் உரிமையானது. மேற்படி பாக ஆவணத்தில் சர்வே எண்.32/6 சொத்து யார் சம்பாதித்த சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது, அது பூர்வீக சொத்து ஆகும். நான் சொல்வது தவறு என்றும், மேற்படி பாக ஆவணத்தில் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எனது தகப்பனார் எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் சர்வே எண்.32/6 எவ்வாறு வந்தது என குறிப்பிட்டு எழுதியுள்ளாரா என்றால் இல்லை.

**4).** 1ம் பிரதிவாதி யார் என்றால் எனது அண்ணன் ஆவார். இந்த வழக்கை நானும் எனது அண்ணன் 1ம் பிரதிவாதியும் மட்டும் தான் நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்துள்ள எதிர் பதில் உரையில், பாரா-7ல், வாதியின் கிரய பத்திரத்தில் ஐக்பந்தியில் சர்வே எண்.32/6ல் வடவண்டை 0.60 சென்ட்டை கிரயம் செய்ததாக காட்டப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ள பட்சத்தில், வாதி கிரயம் பெற்ற ஆவணமான **வா.த.சா.ஆ.3** ஆவணத்தில் சொத்து விவரத்தில் அவ்வாறு உள்ளதா என்றால் சரியாக தெரியவில்லை. நாங்கள் தாக்கல் செய்துள்ள **பி.வா.த.சா.ஆ.9** ஆவணமான அசல் வழக்கு எண்.7/2006ன் சொத்து விவரத்தில், ஆறுமுகம் கிரய நிலத்திற்கு தெற்கு என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அப்படி என்றால் ஆறுமுகத்தின் நிலம் எங்களது நிலத்திற்கு வடக்கில் உள்ளது என்றால் சரிதான்.

**5).** சர்வே எண்.32/6ஆனது தற்போது சர்வே எண்.32/6எ, 32/6பி என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது **பி.வா.த.சா.ஆ.7**ஆகும். சர்வே எண்.32/6ன் விஸ்தீரணமானது இரண்டாக பிரிந்துள்ளது என்றால் சரிதான். வாதி தாக்கல் செய்த வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியுமா என்றால் படிக்க தெரியும். வழக்குரை ஆங்கிலத்தில் உள்ளதால் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். வழக்குரையில் தாவா சொத்து விவரம் தமிழில் உள்ளது என்றால் சரிதான். அதில் சர்க்கார் புஞ்சை சர்வே எண்.32/6, புதிய சர்வே எண்.32/6எ என உள்ளது என்றால் சரிதான். புதிய சர்வே எண்.32/6எ-ன் பட்டா நகலை வாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அது **வா.த.சா.ஆ.4** என்றால் சரிதான்.

**6**). சர்வே எண்.32/6எ-க்கு வடக்கில் வாதி ஆறுமுகத்தின் நிலம் சர்வே எண்.32/5 உள்ளது என்றால் சரிதான். வாதி சர்வே எண்.32/5ல் 28 சென்ட்டும், சர்வே எண்.32/6எ-ல் 60 சென்ட்டும் சேர்த்து 88 சென்ட்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ஆறுமுகம் நிலத்திற்கு தெற்கில் தான் எங்கள் நிலம் உள்ளது என்றால் சரிதான். ஆறுமுகம் அவரது கிரயம் வாங்கிய நிலத்திற்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், அதற்கு கிரய ஆவணம் தாக்கல் செய்துள்ளார் என்றும், எங்களுக்கு 60 சென்ட் நிலம் மட்டும் தான் உரிமையானது என்றால் சரியல்ல. வாதி அவருடைய சொத்திற்கு நீதிமன்றத்தில் தீர்ப்பு கேட்பதற்கு வாதிக்கு உரிமையுள்ளது என்றும், அதை நாங்கள் ஆட்சேபனை செய்ய முடியாது என்றால் சரியல்ல, அவர் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி வழக்கு சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்திற்கு நாங்கள் ஆட்சேபனை மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எங்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்கு பொருத்தமானது அல்ல என்றும், எனது சாட்சியம் தவறானது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

**Ending time : 1.49 p.m.**

Taken down by me in Open court read over to the witness in the presence of the Plaintiff/Defendant and admitted by him/her to be correct.

Sd/-C. Mahalakshmi,
District Munsif,
Vandavasi.